## நகர அபிவிருத்தி அதிகாரசபை - 2018

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராய மறுப்பு

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக்கு கொள்கைகளை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்னபற்றில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தை வழங்காது விடுகின்றேன். இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களது முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற முடியாது போனது.

### 1.2 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியல் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நான் அபிப்பிராயத்தை வழங்காது விடுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தரப்பினரது பொறுப்பு

இந் நிதிநிலைமைக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயாரித்தலும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்கள் இல்லாத நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டை தீர்மானிப்பதும் முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் அதிகாரசபை தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், அதிகாரசபையைக் கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேலொழிய தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கீடுகளை மேற்கொள்வதும் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் தன்மையை குறிக்கும் விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையில் செயற்பாடுகள் சம்பந்தமான பொறுப்பு, நிர்வாகத் தரப்பினதாகும்.

2018 ஆம்ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலத்துக்கேற்புடைய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு சுய வருமானம், செலவினம், சொத்துக்கள்,

பொறுப்புகள் என்பன தொடர்பாக முறையாக ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணுவது அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நடைபெறும் கணக்காய்வின் அடிப்படையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பித்தல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராய மறுப்பு எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் இக்கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமானதும் உசிதமானதுமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற முடியாது போனது.

## 1.5 நிதிக்சுற்றுகக்ள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிச்சயிக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுதல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவை ஏற்படும் விதத்தில் கொடுக்கல் வாங்கல்களைக் குறித்துக் கொள்ளுதல், சொத்துக்களின் பொருட்டு கணக்கீடுகளை மேற்கொள்ளுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிச்சயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரமே சொத்துக்களில் பிரவேசித்தல், குறித்துக்கொண்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடைமுறையை தற்போதுள்ள சொத்துக்களுடன் அவ்வப்போது நியாயபூர்வமாகக் கணக்கிணக்கம் செய்தல், வேறுபாடுகளிருப்பின் அதற்கேற்ப தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல் என்பவற்றிற்கான நியாயபூர்வமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கான ‘‘சிறந்தவாறு திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கட்டுப்பாடு முறைமை நிறுவகத்தில் இருப்பது அவசியமாகும். பொதுப்பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்புக்கான உறுதிச்சான்று, பிரதான கணக்கீட்டு அறிக்கையைப் பேணுதல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாட்குறிப்பு ஒன்றின் மூலம் கொடுக்கல் வாங்கலைப் பதிவு செய்யும் போது குறித்த கொடுக்கல் வாங்கலைச் சீராக்கல் செய்வதற்கான தேவை மற்றும் அதற்குரிய சரியான இரட்டைப் பதிவு தொடர்பாக உயர் முகாமைத்துவ உத்தியோகத்தர் ஒருவரது அல்லது உத்தியோகத்தர் குழாம் ஒன்றினது மேற்பார்வை அல்லது அங்கீகாரம் வேண்டுமாயினும், அதிகாரசபையின் கணக்குகளில் நாட்குறிப்புகளின் மூலம் சீராக்கல் செய்யப்படும் போது அவ்வாறான மேற்பார்வை இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br>அதற்கமைய, ஆண்டின் போது 13,148 வரவுக்குறிப்புகளும் 28,686 செலவுக்குறிப்புகளுமாக ரூபா | கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்கப்பட்ட சகல நாட்குறிப்புகளும் கணக்காளர்/ உதவிப்பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் ஒருவரது பரிசீலனையுடன் அல்லது அங்கீகாரத்தின் பின்னர் கணக்கிலிடப்படும். இதற்கமைய எதேனும் உத்தியோகத்தர் ஒருவர் கணக்கீட்டு முறைமையில் நாட்குறிப்பு மூலம் கணக்கிலிட்டுச் சீராக்கலை மேற்கொள்ள இயலாது. நாட்குறிப்புகளின் மூலம் கணக்கீட்டு முறைமையில் சேர்க்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பல உள்ளன.<br><br>எவ்வாறாயினும், உயர் உத்தியோகத்தர் ஒருவரது மேற்பார்வையுடனேயே நாட்குறிப்பைக் கணக்கிடும் நடைமுறையை 2020 | உயர் உத்தியோகத்தர் ஒருவரது மேற்பார்வையின் கீழ் முறையான வேலைப்பகிரிவு அடிப்படையில் நாட்குறிப்பின் மூலம் கணக்குகளில் சீராக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 66,054 மில்லியன் கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, அதிகாரம் பெறாது நிதிப்பிரிவு அல்லது வேறு ஒரு பிரிவினது யாராவது ஒரு உத்தியோகத்தர் நாட்குறிப்புகளை இட்டதன் மூலம் அதிகாரசபையினது கணக்கு மீதிகளை தேவைக்கேற்றவாறு சீராக்கல் செய்து தவறுகள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நவம்பர் தொடக்கம் அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | அதிகாரசபையில் அமுலாகும் கணனி கணக்கு முறைமையை நோக்குவதற்கும் (VIEW) அறிக்கையைப் பெறுவதற்கும் (PRINT) முறைமையில் முறையான கணக்காய்வு வசதிகள் (AUDIT TRAIL) வழங்கப்பட்டிராததால் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம், செலவினம் என்பவற்றின் விபரத்தைப் பெற முடியாது கணக்காய்வின் நோக்கெல்லை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அநேக ஆண்டுகளாக கணக்காய்வில் சுட்டிக்காட்டிய போதும் மீளாய்வாண்டு முடிவிலும் இந்த வழு நிவர்த்தி செய்யப்படாதிருந்தது. | உயர் உத்தியோகத்தர் ஒருவரது மேற்பார்வையுடன் நாட்குறிப்பிடும் நடைமுறை 2020 நவம்பர் தொடக்கம் அமுலாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | உயர் உத்தியோகத்தர் ஒருவரது மேற்பார்வையின் கீழ் முறையான வேலைப்பகிர்வு அடிப்படையில் நாட்குறிப்பின் மூலம் கணக்குகளில் சீராக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அதிகாரசபையின் வருமானம் சேகரிக்கப்படும் இடங்களில் நாளாந்த நடவடிக்கைகள் மிகுந்த மேற்பார்வைக்குள்ளாகாத நிலையேற்படுமாயினும் பெத்தகான தெத்பிம பூங்காவில் அனுமதிச்சீட்டு வருமானத்தைப் பரிசீலித்து அதனைச் சரிவர வங்கியிலிட முறையான பரிசீலனை மாதத்திற்கு ஒரு முறையேனும் நடவடிக்கை எடுக்கப்படாது கடந்த 2016 யூன் தொடக்கம் கணக்காய்வு வரைவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட காலத்திற்குரிய பூங்காவின் அனுமதிச்சீட்டு வருமானமும் ஏனைய வருமானமுமான ரூபா 3,583,485 க்கு அதிகமான தொகையை அங்குள்ள உத்தியோகத்தர் மோசடி செய்திருந்தனர். | 2016.06.15 தொடக்கம் 2018.07.31 வரைபெத்தகான தெத்பிம பூங்காவில் ஏற்பட்ட ரூபா 3,583,485 பண மோசடி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.<br><br>இது தொடர்பாக 2018.12.28 ஆந் திகதியன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மிரிஹான பொலிசுக்குப் புகாரிட முயன்றபோதும், அது பொதுச்சொத்து மோசடியானதால் குற்றப்புலனாய்வு பொலிசுக்கு (CID) புகாரிட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சட்ட ஆலோசனையின்படி 2019.01.09 ஆந் திகதியன்று மிரிஹானபொலிசில் புகாரிடப்பட்டது. | சரியான உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டு மோசடிகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் காலப்பகுதிக்குரிய வோட்டர்ஸ் எட்ஜ் துணைக் கம்பனியினது நிதிக்கூற்றுக்களது கணக்குகளின்படி நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 1,621,953 பெறப்பட வேண்டியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் இது கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மீதியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. 24 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய இத்தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களைாக இதனை வெளிப்படுத்தவுமில்லை. | சம்பந்தப்பட்ட தரப்பினரால் கொடுக்கல் வாங்கலைகளாகக் குறித்துக் கொள்ளப்படவில்லை. கொடுக்கல்வாங்கல் சேர்ந்து நின்ற அடிப்படையில் (Accrual basis) அமைந்ததால் அதிகாரசபையின் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. கம்பனியுடன் இது தொடர்பாகப் பரிசீலித்த போது அதிகாரசபைக்கு சொந்தமில்லாத கொடுக்கல்வாங்கல்களும் காணப்பட்டன. | தொடர்புடைய தரப்புடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | முதலீடு செய்யப்பட்ட சொத்துக்களைக் கணக்கிலிடுகையில் அதிகாரசபையானது 99 ஆண்டுகள் அல்லது அதற்கு குறைவான அடிப்படையில் காணிகளையும் சொத்துக்களையும் வழங்கும் போது அச் சொத்துக்களை நிச்சயபூர்வமாக இனம் காணுதல், பெறுமதியிடுதல், கணக்கிலிடுதல் சம்பந்தமாக நிச்சயபூர்வமான கொள்கையினைக் கடைப்பிடிக்காதிருந்தது. முதலீட்டுச் சொத்துக்களுக்கென பதிவேடு ஒன்றும் பேணப்படவில்லை. இதன் காரணமாக, நிச்சயமாமனதொரு கொள்கையைக் கடைப்பிடிக்காது பல்வேறு அடிப்படைகளில் பெறுமதியை மேற்கொண்டு நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 91,781 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் சரியானவைதானா என்பதைக் கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்துது. | முதலீட்டுச் சொத்துக்கள் அடங்கலாக அதிகாரசபையின் சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காட்டப்படுவதற்கான நடைமுறை மேற்கொள்ளப்பட்டவாறுள்ளது. இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாகியதும் 99 ஆண்டுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகளை நிச்சயித்து இனங்காணக்கூடியதாக இருக்கும். | முதலீட்டுச் சொத்துக்களை முறைப்படி இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டும் நடவடிக்கை மேற்கொண்டு விபரமானது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 ஆம் இலக்கத்தினது 2 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபையின் நிதி நிலைமைக்கூற்றில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட ரூபா 29,196 பெறுமதியான மாடி வீடுகள் விற்பனை கையிருப்பாகக் காட்டப்பட்டிருந்தது. இது நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டபோதும், இவ்வீடுகளை வழங்குவதுடன் தொடர்புடைய நிர்மாணக் கிரயத்தை இனங்காண்பது மற்றும் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு மாற்றம் செய்வது என்பன தொடர்பான கணக்கீட்டுக் கொள்கையை அதிகாரசபை இனங்கண்டிருக்கவில்லை. | வேலை முடிவுற்றதைக் குறிக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டவற்றிற்கு மாத்திரமே விற்பனைக் கையிருப்பிற்கான மாற்றம் செய்யப்படும். | மாடி வீட்டுச் செயற்திட்டம் அதிகாரசபையின் சாதாரண வியாபார நடவடிக்கைகளின் ஊடாக விற்பனை செய்யப்படும் நோக்குடன் ஆன விற்பனைக் கையிருப்பு ஆகுமா என்பதை தெளிவுபடுத்தி அதற்கேற்ப கணக்கீட்டுக் கொள்கையொன்று இனம்காணப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக்குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் வீடுகளை விற்பனை செய்து பெற்ற இலாபம் ரூபா 46,841,693 ஆகுமென விரிவான வருமானக்கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தபோதும், விற்பனை செய்யப்பட்ட மாடி வீட்டுக்கூறுகளது நிர்மாணக்கிரயம் மற்றும் காணிகளது விற்பனைப் பெறுமதி ஒன்றுக்கொன்று முரண்பட்டதால் அதனடிப்படையில் வீட்டு விற்பனை இலாபத்தைக் கணிப்பீடு செய்த விதத்தை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கவில்லை. அவ்வாறே, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் வீட்டு நிர்மாணத்தால் ஏற்பட்ட இலாபமாக ரூபா 31,933,299 முன்னைய ஆண்டிற்கான சீராக்கலாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டினது இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட்டதால் மீளாய்வாண்டினது இலாபம் அதேயளவு அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | குறைந்த வருமானம் பெறுவோருக்கென நிர்மாணிக்கப்பட்ட இந்த மாடி வீடுகள் விற்பனைக் கையிருப்பாக அல்லாது நிர்மாண வேலை முடிவடைந்த மாடிவீடாக வகைப்படுத்தப்பட்டு 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. அதிகாரசபை இது சம்பந்தமாக கொள்கை ஒன்றைத் தயாரித்தவாறு உள்ளது. அதற்கமைய, நிர்மாண ஆண்டின் போதே அக்கொள்கையை கணக்கில் புலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாடி வீட்டுச் செயற்திட்டம் அதிகாரசபையின் சாதாரண வியாபார நடவடிக்கைகளின் ஊடாக விற்பனை செய்யப்படும் நோக்குடன் ஆன விற்பனைக் கையிருப்பு ஆகுமா என்பதை தெளிவுபடுத்தி அதற்கேற்ப கணக்கீட்டுக் கொள்கையொன்று இனம்காணப்பட வேண்டும். |
| (ஆ) தற்சமயம் நாட்டில் அமுலில் இல்லாத தேசிய பாதுகாப்பு வரி (NSL) மற்றும் பண்டங்கள், சேவைகள் வரி (GST) கடப்பாடானது அநேக ஆண்டுகளாக ரூபா 36 மில்லியன் அறவிடப்பட | தற்சமயம் நடைமுறையில் இல்லாத தேசிய பாதுகாப்பு வரியும் பண்டங்கள், சேவைகள் வரியும் அந்த வரிகள் முடிவுக்கு வந்த தினத்தில் | அறவிடப்பட முடியாத சட்டபூர்வ அடிப்படை அற்ற மீதி சம்பந்தமாகத் தேவையான |

| | | |
|---|---|---|
| வேண்டிய வரிக் கடன்பட்டோராக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் தொகை அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | உள்ளவாறான கடன்பட்டோர் மீதிகளாகும். இவற்றை அறவிடுவது சாத்தியமற்றதால் பதிவழிப்புச் செய்வதற்கான முகாமைத்துவ பத்திரம் அங்கீகாரத்தின் பொருட்டு 2020.12.31 க்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 13 கணக்கு மீதிகள் மற்றும் அவற்றுடனொத்த பட்டோலைகளில் காட்டப்பட்ட மீதிகளுக்கிடையே ரூபா 675.5 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, 08 அரச நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 416.25 மில்லியன் மீதி அதிகாரசபையினது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், அந்த நிறுவனங்களில் 02 நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களில் மாத்திரமே அதிகாரசபைக்கு ரூபா 61.9 மில்லியன் செலுத்த வேண்டியுள்ளதாகக் காட்டப்பட்டிருந்தது. அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் படி அதிகாரசபை 02 அரச நிறுவனங்களுக்கு ரூபா 225.2 மில்லியன் மீதியைச் செலுத்த வேண்டியுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் காட்டியபோதும், அதற்கொப்பாக அந்த நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதி ரூபா 174.3 மில்லியன் வித்தியாசத்தைக் காட்டியது. எவ்வாறாயினும், இவ் வித்தியாசத்தை இனங்கண்டு தேவையான சீராக்கலை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்குகளில் ஆரம்ப மீதிகளில் தொடர்ச்சியாக வித்தியாசம் நிலவி வருவதால், தற்சமயம் இவ் வித்தியாசத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. 2020.12.31 இல் உள்ளவாறாக கணக்குகளைத் தயாரிக்கும் போது குறித்த பணி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | அநேக ஆண்டுகளாக நிலவி வரும் ஆரம்ப மீதி வித்தியாசத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுகளில் தேவையான சீராக்கலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.6 ஒருங்கிணைத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒருங்கிணைத்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையின் துணைக் கம்பனியாகிய நகர முதலீட்டு அபிவிருத்திக் கம்பனி, வோட்டர்ஸ் எட்ஜ் லிமிட்டட், லங்கா | கருத்துரை வழங்கப்படவில்லை. | துணைக் கம்பனிகளுக்குரிய முதலீடுகள் அவற்றுடன் தொடர்புடைய சொத்துக்கள், உரிமை மூலதனப் பொறுப்புகள், வருமானம், செலவினம் என்பன |

| | | | |
|---|---|---|---|
| | ரெஸ்ட்ஹவுஸ் பிரத்தியேக கம்பனி என்பவற்றின் 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தன. பேலியகொடை வெயார்ஹவுஸ் கூட்டுத்தொகுதி கம்பனியால் 2017 தொடக்கம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 04 கம்பனிகளதும் பங்குகள் யாவும் அதிகாரசபைக்குச் சொந்தமானதாகும். 207 யூலை மாதத்தில் பெலியகொடை வெயஙார்ஹவுஸ் கூட்டுதொகுதியின் முதலீட்டுப் பெறுமதி ரூபா 500 மில்லியன் ஆகவிருந்தது. அம் முதலீட்டுப் பெறுமதி அவ்வாறே காட்டப்பட்டு 2017 ஆகஸ்ட் தொடக்கம் கம்பனியை அதிகாரசபை சுவீகரித்த போதும் சொத்துக்கள், பொறுப்புகள் ஏனைய கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவையாயன சீராக்கல் கொடுக்கல் வாங்கல்களில் மேற்கொள்ளப்படவில்லை. | | நிதிக்கூற்றுகளில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தீர்ப்பொன்றின்படி நகர அபிவிருத்தி சபைக்கு சொத்தாக வழங்கப்பட்ட ரூபா 642.5 மில்லியன் பெறுமதியான காணியும் கட்டிடங்களும் அவற்றினது பழுதுபார்த்தலுக்கென வழங்கப்பட்ட ரூபா 200 மில்லியனும் பொருட்டு வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியாகிய துணைக்கம்பனி நகர அபிவிருத்தி சபையிடமிருந்து பங்குகளுக்கு விண்ணப்பித்திருந்தது. எனினும் 2018 டிசெம்பர் 31 வரை பங்குகள் வழங்கப்பட்டிராததுடன் ரூபா 842.5 மில்லியன் பெறுமதியுடைய பங்குகள் வழங்கப்படுவதற்கான உடன்பாடு (Pending allotment of shares) உள்ளதாக வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியின் நிதி நிலைமைக்கூற்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி சபையின் நிதிக்கூற்றுக்களுக்கமைய அப் பெறுமதி ரூபா 436 மில்லியன் ஆகவிருந்தது. இதன் காரணமாக, இம் முதலீட்டுப் பெறுமதியானது ரூபா 406.5 மில்லியன் குறைவடைந்திருந்ததுடன் அதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவுமில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியின் தாய் நிறுவனம் என்ற ரீதியில் கம்பனியின் நடவடிக்கைகள் நீதிமன்றத் தீர்ப்பின்படியும் அமைச்சின் அங்கீகாரத்துடனும் செயற்படுத்தப்படுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.7 கணக்காய்விற்கான சான்றின்மை**

| | விடயம் | தொகை (ரூபா மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | முதலீட்டுச் சொத்துக்கு (பாராளுமன்ற கூட்டுத்தொகுதிக்கு உரிய 1167 ஏக்கர் காணி) | 5.782 | சுவீகரிப்பு விபரமும் மதிப்பீடு செய்த அறிக்கையும் | பாராளுமன்றக் கூட்டுத்தொகுதிக்கென சுவீகரிக்கப்பட்ட காணியில் வீதி அபிவிருத்தியை வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனங்களும் மேற்கொண்டிருந்தன. வாவிகளையும் ஓடைகளையும் அபிவிருத்தி செய்தது இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆகும். அவ்வாறே, இந்த 1167 ஏக்கர், 03 றூட், 36.9 பர்ச்சஸ் காணி கடுவெல, மஹரகம, ஸ்ரீஜயவர்த்தனபுர பிரதேச செயலகங்களை உள்ளடகியதென மேலும் குறிப்பிட விரும்புகிறோம். | முதலீட்டுச் சொத்து விபரம் ககணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | காணி | 90.8 | காணிப் பதிவேடு | அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகள் சம்பந்தமான விபரத்தைக் கணனி மயப்படுத்த் நடவடிக்கை 2020 செப்தெம்பர் இறுதியளவில் 1637 கோவைகளுக்கே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இக் காணித் தரவுக்கென கணனிமயப்படுத்தலை 2021 யூன் இறுதியளவில் பரிசீலித்து முடிப்பதற்கு எதிர்பார்க்கிறோம். | அதிகாரசபைக்குச் சொந்தமான காணி சம்பந்தமாக விரிவான பதிவேடு பேணப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | காணிக் கணக்கீட்டு முறைமையின் மூலம் உருவாக்கப்படும் மீதிகள் | | | | |
| | (i) வரவு மீதி<br>(ii) வெலவு மீதி | 38.34<br>229.08 | சீராக்கலுக்கான விபரம் | 1982 ஆம் ஆண்டின் கணக்கீட்டு முறையை கணனி மயப்படுத்தும் போது 1979 தொடக்கம் அமுலாகிய கொடுக்க் வாங்கல்களும் காணி முறைமையில் உள்ளடக்கப்பட்டன. எவ்வாறாயினும், காணி முறைமையின் மூலம் பெறப்பட்ட ஐந்தொகை பெறுமதிகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் இருந்தன. இவ்வாறு இணக்கமுறாத கணக்குகளது பெறுமதி Unidentified Balance அல்லது Opening Balance ஆக கணக்கீட்டுப் பதிவேடுகளில் காட்டப்பட்டன. இவ்வாறு இலக்கமுறாத சகல பெறுமதிகளுக்குமென சீராக்கல்கள் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கென 2020.10.31 ஆந் திகதிக்கு முன்பே முகாமைத்துவப் பத்திரம் ஒன்று அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. | இனங்காணப்படாத மீதிகள் தொடர்பான விபரத்தை கணக்குகளில் சீராக்கல் செய்து கணக்கீட்டு முறைமையைத் துரிதமாக நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நடைபெறும் வேலை | 28,817 | நடைபெறும் வேபைப் பெறுமதியில் சீராக்கல் செய்யப்பட்ட கடன்பட்டோர் கிரயம், ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏனைய சீராக்களது விபரம் | நடைபெறல் வேலைக்கணக்கில் காட்டப்பட்ட இவ்வாறான செயற்திட்டங்கள் தொடர்பாக தேவையான எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்த கால அட்டவணைப் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டுள்ளது. அதற்காக, அச் செயற்திட்டப் பிரிவுகளிடமிருந்து அவற்றினது தற்போதைய | அதிகாரசபைக்கு சொந்தமில்லாத செயற்திட்டங்கள் அதிகாரசபையில் நடைபெறும் வேலையாகக் காட்டப்படலாகாது. நடைபெறும் வேலை மீதி சரிவர சீராக்கல் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நிலைமை தொடர்பான விபரத்தை 2020.10.15 க்கு முன்னர் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. அத்தகவல்களின் அடிப்படையில் தொடர்ந்தும் இக் கணக்கில் இது இருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கவும் அவ்வாறு இல்லாதுவிடின் தொடர்புடைய சரியான வகைப்படுத்தலின் கீழ் கணக்குகளில் அவற்றைக் காட்டுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (உ) | பிற்போடப்பட்ட வாடகைக் கொள்வனவு பொறுப்புகள் | 539 | வாடகைக் கொள்வனவு மீதிக்கான சீராக்கலைக் குறிக்கும் விபரம் | இக் கணக்கின் வரவு மீதியான ரூபா 118,580,368 ஆனது வரிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள், விற்பனை செய்யப்பட்டிருந்தும் இதுவரை விற்பனைக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத குத்தகைகள், கட்டுநிதியின் கீழ் பெறப்பட்ட தொகை, நெடுங்கால குத்தகையாகக் கணக்கிலிடப்பட்ட குத்தகைகள் மற்றும் குத்தகைகள் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட குத்தகைகள் என்பனவாகும்.<br><br>பிற்போடப்பட்ட வாடகைக் கொள்வனவு பட்டோலையில் மிகவும் பழமை வாய்ந்த குத்தகைகளை குறிக்கும் குத்தகை உடன்படிக்கைகள் இதுவரை கைச்சாத்திடப்படவில்லை. குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டிய ஆரம்ப திகதிகள் | அதிகாரசபையின் முதலீட்டுச் சொத்துக்கள் சம்பந்தமாகவும் பிற்போடப்பட்ட வாடகைக் கொள்வனவுகளின் வாடகை சம்பந்தமாகவும் நிதிக்கூற்றுக்களில் விளக்கமளிக்கப்பட வேண்டும்.<br><br>நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்படும் ஆவணங்கள் சரியாகப் பேணப்பட்டு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டை முகாமைத்துவம் மேற்கொள் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | குறித்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறாக பழைய ஆண்டுகளைக் குறிப்பிட்டதற்கான காரணம் அவற்றை இலகுவாக இனங்காண்பதற்காகவே ஆகும். 2020 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது திருத்தம் மேற்கொள்ளப்படும். | |
| (ஊ) | நகர புனர்ஜீவன செயற்திட்டத்தின் கீழ் அதிகாரசபை குடியிருப்பாளருக்கு வழங்கியுள்ள வீடமைப்புத் திட்ட வீடுகளிலிருந்து பெற வேண்டிய தொகை | 166.8 | விரிவான பட்டோலையும் காலப் பகுப்பாய்வும் | தற்போதுள்ள கணக்கீட்டு முறைமையில் முன்னைய கணக்கீட்டு முறைமையின் மீதியே ஆரம்ப மீதியாகக் காட்டப்பட்டுள்ளது. வீடமைப்புச் செயற்திட்டக் காலப் பகுப்பாய்வை தற்போது பெற முடியாதுள்ளது. தொடர்புடைய கணனி மென்பொருள் நிறுவனத்திற்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2020.12.31 இல் உள்ளவாறு காலப்பகுப்பாய்வை பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. | கணக்காய்வு மட்டுப்படுத்தப்படாதவாறு கணக்கீட்டு முமைமையில் உள்ள நலிவுகளைக் குறைப்பதற்கு முயல வேண்டும். எதிர்காலத் தேவையின் பொருட்டு தகவல்கள் நாளது வரையாக்கப்பட வேண்டும். |
| (எ) | முதலீட்டுச் சொத்துக்கள் | 97.781 | முதலீட்டுப் பதிவேடு | முதலீட்டுச் சொத்துக்களை வெவ்வேறாக இனங்காண்பதற்கான வேலைத்திட்டம் தற்போது அமுலாக்கப்படுகின்றது. | முதலீட்டு சொத்துக்கள் தொடர்பான விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்ய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்யன

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோராகவும் பெற வேண்டியனவாகவும் ரூபா 1.729 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டபோதும் பெறவேண்டிய இம் மீதிகளுக்குரிய காலப் பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகும் கடனைக் கட்டுப்பாடு செய்து துரித அறவீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைக்கமைய, அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோரில், 24 கணக்கீட்டு மீதிகளது ரூபா 536 மில்லியன் கூட்டுத்தொகை 2013 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்படாது முன்கொண்டுவரப்பட்டவாறு இருப்பனவாகும். அக் கடன்பட்டோர் மீதியானது கொடுக்கல்வாங்களின்றி இருந்தன. அவ்வாறே, மீளாய்வாண்டு கடன்பட்டோரின் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அடிப்படை எதுவுமில்லாது ரூபா 918.3 மிலியன் திரட்டு ஐயக்கடன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | வேண்டும். கடன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையான கொள்கையினைத் தயாரித்து திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சேர்ந்து நின்ற வருமானத்தை அறவிடும் நடைமுறையானது தொடர்புடைய கணக்குகளில் உள்ள நிதியேற்பாட்டிற்கு ஏற்ப நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாதாந்த வாடகை அல்லது வாடகைக் கொள்வனவு அடிப்படையில் அதிகாரசபை சொத்துக்களை வழங்கும் போது அவ்வாடிக்கையாளரது சொத்துக்கள், மாதாந்த வருமானம், கொடுப்பனவு செய்யும் ஆற்றல் என்பன பகுப்பாய்வு செய்யப்படாதும் போதுமான பாதுகாப்புப் பிணை வைப்பு பெறப்படாதும் குத்தகைக்கு வழங்கப்பட்டமையால், தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டிலும் குத்தகை நிலுவை / கடை வாடகை நிலுவை அதிகரித்திருந்தன. இதன் காரணமாக, ஓராண்டிற்கும் குறைவான பெற வேண்டிய மீதிகளின் பொருட்டு 35 முதல் 79 சதவீதமான அதிகரித்த சதவீதத்தை நட்டம் / காலக்கழிவு தொடர்பாக நிதியேற்பாடு செய்வதன் மூலம் கடனை அறவிடும் அதிகாரசபையின் வினைத்திறன் இன்மை தென்படுவதுடன் தொடர்ச்சியாக அதிகாரசபை நட்டக் கடனுக்குள்ளாகும் போக்கும் அவதானிக்கப்பட்டது. | ஓராண்டிற்குக் குறைவான கடன்பட்டோருக்கு 35 முதல் 77 சதவீதம் வரையான நட்டக் கடன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. கடன்பட்டோரது அறவீடுகளை ஆய்வு செய்த கணக்காய்வு நிறுவனம் ஒன்றினது ஆலோசனைக்கமையவே இது 2015/2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அச் சதவீத நிதியேற்பாடு 2017, 2018 ஆம் ஆண்டுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் கடன்பட்டோர் அறவீட்டிற்கான முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டுசதவீத மாற்றம் மேற்கொள்ளப்படும். | வரி செலுத்தாத வாடிக்கையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் சொத்துக்களை அதிகாரசபை சுவீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 கொடுப்பனவு செய்ய வேண்டியன

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபிவிருத்திச் செலவினமாகிய ரூபா 77,847,384 மாற்றம் எதுவுமில்லாது 06 ஆண்டுகளுக்கும் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டவாறிருந்தது. அவ்வாறே, நடைமுறைப் பொறுப்பின் கிழ் ரூபா 7,255,110 பராமரிப்பு வைப்பாகக் காட்டப்பட்டிருந்தபோதும், அம்மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேலாக தீர்வு செய்யப்படாதிருந்த ரூபா 7,063,500 மீதியும் உள்ளடங்கியிருந்தது. | மாற்றம் எதுவுமின்றி 06 ஆண்டுகளுக்கும் மேலாக ரூபா 77,847,384 கடன்கொடுத்தோர் மீதியாயிருந்தது. | கொடுப்பனவு செய்ய வேண்டிய இம்மீதியில் பொறுப்பு இல்லாத மீதிகளைக் கண்டறிந்து அவற்றை வருமானத்திலிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் / பணிப்புரை உடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் 8 ஆம் பந்தியினது பிரிவு | நகரக் காணிப் பயன்பாடு தொடர்பாக அதிகாரசபை கொள்கை ஒன்றைத் தயாரித்து அமுல்படுத்த வேண்டுமாயினும் மீளாய்வாண்டு இறுதியிலும் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது. | கருத்தரை வழங்கப்படவில்லை | அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 11அ பகுதியின் பிரிவின் 8(அ) பிரிவு | பல்வேறு சந்தர்ப்பங்களில் வாகனங்களில் வருகை தரும் பொதுமக்களது வாகனங்களைத் தரித்து வைக்கும் நிலையமொன்றை உருவாக்குதலும் அவ்வப்போது அதன் வசதிகளை அதிகரிப்பதற்குமான தேவை அதிகாரசபையின் தலையீட்டில் நடைபெற வேண்டுமெனினும் அதிகாரசபை அது தொடர்பாக போதிய கவனம் செலுத்தாமையால் கொழும்பிலும் நெரிசல் மிக்க நகரங்களிலும் வீதிப்போக்குவரத்து அதிகரிக்கக் காரணம் ஏற்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவினது பரிந்துரை மற்றும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன இல்லாது நகர அபிவிருத்தி சபை பொறியியலாளர், வாஸ்து தொழில்நுட்பவியலாளர், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், நகர நிர்மாணவியலாளர்கள் ஆகிய தொழில் புரிவோருக்கு ரூபா 15,000 மாதாந்த தொழில்சார் படியாக 2019 யூலை 01 தொட்க்கம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டிற்கான தொழில்சார் படிக்கொடுப்பனவு விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த அதிகாரசபையில் பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் தெரில்சார் பணிபுரிபவர்களுக்கு மாதாரந்த படியாக ரூபா 15,000 வழங்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டபோதும் இதுவரை பெறப்படாதுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு முரணாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2016 மார்ச் 09 ஆம் திகதிய 2016/05 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதவியணிக் குறிப்பில் குறிப்பிடப்படாத பணிப்பாளர் மற்றும் பிரதிப் பிணப்பாளர் பந்திகள் என்பவற்றுக்கு இடையே கூறுகளது தலைவர் பதவியும் உருவாக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது அப் பதவிகளுக்கு 06 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு 2 சம்பள ஏற்றங்களை வழங்கியும் தமது சொந்த வாகனங்களை உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்துவதற்கு எரிபொருள் படியும் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இவ்வாறு கொடுப்பனவு செய்யப்படட முழுத்தொகையும் | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் மாத்திரமே படியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே, அந்த உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்குகையில் முறையான பதவி உயர்வு நடைமுறையிலிருந்து விலகியவாறு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (உ) | 2008 யூன் 26 ஆந் திகதிய 2018/14 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 2015/1 எனும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | தனியார் வாகனங்களை உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்தி படியைப் பெறும் அதிகாரசபையின் 20 உத்தியோகத்தர்கள் அவ் வாகனங்களுக்கு அதிகாரசபை சாரதிகளைப் பயன்படுத்த முடியாது. எனினும், அவ்வாறாகப் பயன்படுத்தப்பட்ட சாரதிகளுக்கு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக முன்னைய ஆண்டில் ரூபா 30,186,085 மீளாய்வாண்டிலே 3,679,290 எனக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அதிகாரசபைக்குச் சொந்தமான 17 பழைய வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதால் அதிகாரசபையின் கடமைகளுக்கென 296/2017 ஆம் இலக்க பணிப்பாளர் சபைப் பத்திரத்தின்படி தனியார் வாகனங்களை உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, கடமையின் நிமித்தம் பல்வேறு தேவைகளுக்கு வெவ்வேறு பிரதேசங்களுக்குச் செல்ல பணிப்பாளர்களும் தொகுதித் தலைவர்களும் போக்குவரத்து செய்ய வேண்டி ஏற்பட்டது. தற்போது 28 வாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பணிப்பாளர்களுக்கும் உயர் பதவியினருக்கும் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைஎடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றிக்கை மற்றும் 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 2006/06 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றிக்கை | வினைத்திறன் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படும் நடைமுறை அதிகாரசபையால் அறிமுகம் செய்யப்பட்டிராததால் பதவிகளுக்கான புதிய சம்பள வியூகத்தை உருவாக்கிய பின்னர் அதனை அமுல்படுத்துவதற்கு தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவினது அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், யோசிக்கப்பட்ட பதவியணியை உபயோகப்படுத்தி முன்கூட்டியே அங்கீகாரத்தைப் பெறாது அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. இச் சுற்றிக்கையின் பிரகாரம் பதவி உயர்வு வழங்கப்படும் போது புள்ளிகளை வழங்கும் நடைமுறை தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டபோதும் அவர்களுக்கு அதனை அறிவித்திருக்கவில்லை. | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் இந்த அதிகாரசபையின் பதவியணித்திட்டம் 2020.01.03 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆயினும் 1670 பதவியணியினருக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆகவே, அதிகாரசபையின் 2020 – 2024 இற்கான தாபன ரீதியான திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான பதவியணியைக் கருத்திற் கொண்டு மீண்டும் 2020.07.21 ஆந் திகதி அங்கீகாரம் கோரப்பட்டது. 2019.09.03 ஆந் திகதிய பணிப்பாளர் சபையினது 367/2019 ஆம் இலக்க பத்திரத்தின் மூலம் பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கையை எடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அமைப்புக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பதவி உயர்வின் போது புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பதவி உயர்வு உத்தியோகத்தர்களுக்கு வெளிப்படையாகத் தெரியும் வகையில் அமைய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2016 சனவரி 08 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றிக்கை | அவசர சேவைகளுக்கு வெளிநபர்களின் சேவையைப் பெறமுடியும். அதன் போது நிறுவனத்தில் பொருத்தமான நபர் இல்லாதிருப்பது நிச்சயப்படுத்தப்பட்டு அமைச்சினது செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்துடன் 2 மாதங்களுக்கு மாத்திம் வெளிநபர்களது சேவையைப் பெற முடியும். எவ்வாறாயினும், அச் சுற்றறிக்கைக்கு முற்றிலும் முரணாக 11 மதியுரையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளம், படி மற்றும் ஏனைய வரப்பிரசாதங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு விரிவாகச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினது தீர்மானத்தின்படியும் அச்சமயத்தில் இருந்த வரிசை அமைச்சினது செயலாளரது பணிப்புரையின் படியும் ஒவ்வொரு விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு 5 மதியுரையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதில் நான்கு பேரது சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சுற்றிக்கைப் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படும். | மதியுரையாளர்களின் கடமைகளை சிச்சயமாக இனங்கண்டதன் பின்னர் அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி மாத்திரமே மதியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை | | | |
| | (i) 4.2.6 ஆம் பந்தி | அதிகாரசபையின் காலாண்டு முன்னேற்ற அறிக்கை குறித்த காலாண்டு முடிவடைந்த 30 நாட்களுக்குள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | காலாண்டு முன்னேற்ற அறிக்கையை பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆயினும், எதிர்காலத்தில் குறித்த காலப்பகுதிக்குள் அந்த அறிக்கையை பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றோம். | காலாண்டு முன்னேற்ற அறிக்கையைக் குறித்த காலப்பகுதிக்குள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 8.2.3 ஆம் பிரிவு | துணைக்கம் பனியாக அதிகாரசபையால் 2014 நவம்பர் 21 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட Urban Investments and Real State | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அபிவிருத்தி நோக்கங்களுக்கு இணங்கவும் அச்சமயம் | முதலீடுகள் தொடர்பில் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமையவும் கம்பனி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தனியார் கம்பனி Urban Investment & Hotal Development கம்பனி, Orchard Urban Housing Development கம்பனி, Waters Edge Hotel Development கம்பனி என்பவற்றிற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | நிலவிய அபிவிருத்தி நிர்ணயங்களுக்கும் ஏற்ப பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி துணைக்கம்பனிகள் உருவாக்கப்பட்டன.<br><br>எவ்வாறாயினும் அத்துணைக்கம்பனிகளின் செயற்பாடு தொடர்பாக புதிய புதிய பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும். | அதிகாரச் சட்டத்திற்கமையவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (iii) 9.14 ஆம் பிரிவு | அதிகாரசபை மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விதிமுறைகளைத் தயாரித்து அதனை அங்கீகரித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடின், மனிதவள முகாமைத்துவத்திற்காக தாபனவிதிக்கோவையில் உள்ள ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை. | தற்சமயம் தாபனவிதிக்கோவை கடைப்பிடிக்கப்படுகின்றது. அதற்குப் புறம்பான சந்தர்ப்பங்களில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவைக்கு புறம்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் போது பொது நிர்வாக அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஐ) | நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரது 1997 சனவரி 24 ஆந் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி | பொது முயற்சிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் அமைச்சில் அல்லது வேறு அரச நிறுவனங்களில் சேவைக்கு விடுவிக்கப்படலாகாது. எனினும் அதிகாரசபையின் 19 ஊழியர்கள் சம்பள மீளளிப்பு அடிப்படையில் பிற அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.<br><br>அவ்வாறே, நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு 8 உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். அக் கம்பனி 79 உத்தியோகத்தர்களை | இந்த அதிகாரசபயில் துணைக்கம்பனியாகிய நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு பதவியணிக்கான திட்டம் எதுவுமில்லை. ஆகவே, அங்கு சேவையின் அவசியம் காரணமாக இந்த அதிகாரசபையின் 08 உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டனர். மேலும், அக் கம்பனியின் 79 உத்தியோகத்தர்கள் அச்சமயம் அதிகாரசபையின் திட்டத் தயாரிப்புக்காக அதிகாரசபையில் இருந்தனர். | பொது முயற்சிகளில் ஈடுபட்டள்ள உத்தியோகத்தர் அமைச்சில் அல்லது பொது அரச நிறுவனங்களில் சேவைக்கு விடுவிக்கப்படலானது சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரசபையில் இணைத்திருந்தனர். ஊதியக் கொடுப்பனவு விபரம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஒ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 8597 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு அதிவிசேட வர்த்தமானியின் V ஆம் பட்டோலையின் 7 ஆம் பந்தி | பல ஆண்டுகளுக்கு முன்பு அதிகாரசபை கொழும்பு மாநகர எல்லைக்குள் மற்றும் வாவிகளை அண்மித்த இடங்களிலும் பரிசீலனை செய்து 1868 அத்துமீறிய குடியேற்றங்களைக் கண்டறிந்தபோதும், வர்த்தமானியின் பிரகாரம் அவற்றை சட்டபூர்வமாக்க முடியுமாயின் பிற்போட்ட அங்கீகாரக்கட்டணம் அல்லது பாவனை மாற்றக் கட்டணத்தை அறவிட்டு அவற்றை சட்டபூர்வமானதாக்க அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆலோசனை சட்டபூர்வமாக அமைய வேண்டுமென அதிகாரசபை பணிப்பாளர் (சட்டவியல்) தெரிவித்தால், ஆலோசனைக் குழுவை வர்த்மானியில் வெளியிட நடவடிக்கை எடுத்து மாண்புமிகு அமைச்சின் அங்கீகாரத்திற்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வாவியைச்சூழவுள்ள இடங்களையும் சுற்றாடல் மாசுபடுதலையும் குறைப்பதற்கு சட்டவிதிகளுக்கு ஏற்ப துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய SP/RD/02/10 ஆம் இலக்க சனாதிபதி அலுவலகச் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி | நகர அபிவிருத்திக்காக அதிகாரசபை வழங்கிய பெருமளவு காணிகள் சுவீகரிக்கப்பட்ட தேவைக்கல்லாது தனியார் நிறுவனங்களுக்கு நெடுங்காலக்குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. சில பெறுமதி மிக்க காணிகள் சொகுசு மாடித்திட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சுவீகரிக்கப்பட்ட காணிகள் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சுவீகரிப்பு நிச்சயிக்கப்பட்டிராத சந்தர்ப்பங்களில் சுவீகரிப்பின் நோக்கம் திருத்தம் செய்யப்பட்டு தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணிகள் விடுவிக்கப்படும். | சுவீகரிப்பு நிச்சயிக்கப்பட்டு இல்லாதிருப்பின், திருத்தம் செய்யப்பட்ட நோக்கமும் இருக்க முடியாது. ஆகவே, சனாதிபதி அலுவலகச் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓள) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | இச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபையின் பல்வேறு செயற்திட்டங்களுக்கு முழுநேர வேலைக்கென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 1/3 பங்கு மேலதிகமாக 132 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,670,367 மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இதனைவிட 43 உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தின் 1/6 பங்காக ரூபா 1,457,699 வழங்கப்பட்டிருந்தது. | தனது நித்திய பதவியில் அல்லது உயர் பதவியில் கடமையாற்றுவது பதில் கடமைகளில் ஈடுபடுதல் மற்றும் தமது நித்திய கடமைக்கு மேலதிகமாக பணிபுரிதல் என்பவற்றிற்கு தொகுதித் தலைவரது பரிந்துரையின் அடிப்படையில் தாபனவிதிக்கோவையின் பிரகாரம் 1/3 மற்றும் 1/6 படி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிகாரசபையின் பல்வேறு செயற்திடடங்களுக்காக வும் தமது நித்திய கடமைகளுக்குப் புறம்பான வேலைகளுக்கு 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைப் பிரகாரம் செயற்திட்டப்படி வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (அஅ) | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டம் 330 ஆம் பிரிவு | பேலியகொடை வெயார்ஹவுஸ் நிறுவனம் 2012 யூலை 31 அன்று தன்னிச்சையாக மூடப்படுவதற்காக கணக்கொழிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், 2021 ஏப்ரல் 25 வரை கணக்கொழிப்பு நடைபெறவில்லை. ஓராண்டிற்கு மேற்பட்ட காலத்தின் பொருட்டு கணக்கொழிப்பாளர் கம்பனியின் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமாயினும், | பேலியகொடை வேயார்ஹவுஸ் நிறுவனத்தின் பூரண உரித்தும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினதாகும். அதற்கமைய பொதுச் சங்கக் கூட்டம் நடாத்தபோதும் நடவடிக்கைகள் தொடர்பாக நகர அதிகாரசபைப் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அங்கீகாரத்தையும் ஆலோசனைகளையும் | பேலியகொடை வெயார்ஹவுஸ் கம்பனியின் உரித்து நகர அபிவிருத்தி அதிகாரசபையினதாகும். எவ்வாறாயினும், சுயாதீனமான கம்பனி ஆகையால் கட்டடத்தை நடாத்த வேண்டும். கூட்ட அறிக்கையை கம்பனிகள் |

| | | |
|---|---|---|
| அவ்வாறாக பொதுக் கூட்டத்தை பெலியகொடை வெயார்ஹவுஸ் நடத்தவில்லை. | பெற்று அதன் பிரகாரம் கம்பனி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. | பதிவாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். |

**1.8 தகவல் தொழில்நுட்ப (IT) போது நிர்வாக முறைமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபை அமுலாக்குவதற்கு எண்ணியிருந்த முயற்சிகள் மூலவளத் திட்டமிடல் (Enterprise Resource Planning) முன்னெடுத்துச் செல்லப்படாது கணக்கீட்டு கணனி மென் அணியை ஸ்தாபித்தல் மற்றும் பேணுதல் என்பவற்றிற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 8.3 மில்லியனுக்கான உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும், உடன்படிக்கைத் தினத்திலிருந்து 120 நாட்களுக்குள்ளான ஒப்பந்த காலப் பகுதிக்குள் கணக்கீட்டுக் கணனி மென் அணி (Customized Accounting Software Package) அமைக்கப்பட வேண்டியிருந்தும், ஒப்பந்தம் வழங்கப்பட்டு மீளாய்வாண்டு முடிவில் ஏறக்குறைய 2½ ஆண்டுகளாகியும் அந்த மென் அணியின் மூலம் அதிகாரசபை எதிர்பார்த்த கணக்கீட்டு முறைமையை சீராக்கி கணக்கீட்டுத் தகவல்களைப் பெறும் பணி நிறைவேறி இருக்கவில்லை. | அதிகாரசபையின் கணக்கீட்டு முறைமையை பேணுவதன் பொருட்டு புதிய கணக்கீட்டு முறையை ஒன்று மிக அவசியமாக உள்ளது. ஆகவே, கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றி நிறுவனம் ஒன்று தெரிவுசெய்யப்பட்டது. தற்சமயம் புதிய கணக்கீட்டு முறைமை ஸ்தாபக்கப்பட்டு பூர்த்தியாகி உள்ளது. புதிய கணக்கீட்டு முறைமையைப் பயன்படுத்தி தொடர்புடைய பட்டோலைகளையும் அறிக்கைகளையும் பெறுவதற்கான வாய்ப்புண்டு என அறியத்தருகின்றோம். | அதிகாரசபைக்கான கணக்கீட்டு மென் அணியை இனங்காணும் போது அதிகாரசபையின் தேவைகளை முறையாக இனங்கண்டு உடன்படிக்கை றேம்கொண்டு குறித்த காலத்துக்குள் ஸ்தாபிப்பதற்கும் அதிகாசபையின் தகவல்களைப் றெுவதற்குமான பங்களிப்பைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பேறுபேறு வரிக்கு முன்னரான ரூபா 769.2 மில்லியன் இலாபமாகும். இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 99.9 மில்லியன் ஆகும். அதற்கமைய, நிதிப்பெறுபேற்றில் ரூபா 669.3 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. ஏனைய வட்டி வருமானம் ரூபா 78.3 மில்லியன் அதிகரித்தமையே இதற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமான, செலவின விடயங்களது போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகாரசபையின் வருமானமானது ரூபா 1.557 மில்லியன் தொடக்கம் ரூபா 1.702 வரை 10.33 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் இதற்கான பிரதான காரணமாக அமைந்தவை, வாடகை வருமானத்தின் 9.29 சதவீத அதிகரிப்பும், சேவை வழங்கல் கட்டணத்தின் (Fee for services rendered) 12.77 சதவீத அதிகரிப்பும், வட்டி வருமானத்தின் 57.68 சதவீத அதிகரிப்புமேயாகும்.

(ஆ) அதிகாரசபையின் பிரதான செலவினமாகிய நிர்வாகச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 840 மில்லியனான 29.8 சதவீத அதிகரிப்புக்குள்ளாகி இருந்தது. நிர்வாகச் செலவினத்தில் அதிகரிப்பு ஏற்பட பிரதான காரணமாக அமைந்தவை, சம்பளம் மற்றும் மிகையூதியம் என்பன ரூபா 367 மில்லியன் அதிகரித்தமையும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பில் ஏற்பட்ட ரூபா 129 மில்லியன் அதிகரிப்பும், நீர்க்கட்டணத்தில் ஏற்பட்ட ரூபா 157 மில்லியன் அதிகரிப்புமேயாகும்.

(இ) உள்ளூர் வங்கிகள் அறவிடும் கடனுக்கான வட்டி குறைவடைந்தமையால் அதிகார சபையின் நிதிச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 811 மில்லியன் தொடக்கம் ரூபா 28 மில்லியன் வரை 96 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டில் 4.4 சதவீதமாக இருந்த நிகர இலாப விகிதம் மீளாய்வாண்டில் ரூபா 31.3 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அதன் பொருட்டு ஏனைய வருமானம் ரூபா 1,673 மில்லியன் தொடக்கம் ரூபா 2,340 மில்லியன் வரை 39.86 சதவீதமான ரூபா 667 மில்லியன் அதிகரித்தும் நிதிக்கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் மீளாய்வாண்டில் ரூபா 783 மில்லியன் குறைவடைந்தும் இருந்தமை இதற்கான பிரதான காரணிகளாக அமைந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொழும்பையும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் நகர அதிகாரசபை அமுலாக்கும் குறைந்த வசதிகளுடனான நகர்குடியிருப்பின் பொருட்டு வீடமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மாளிகாவத்தை “லக்ஹிறு செவன” வீடமைப்பு தொகுதியை மக்களுக்கு வழங்கும் விழாவுக்கு ரூபா 5,010,039 பயனற்ற செலவினத்தை அதிகாரசபை மீளாய்வாண்டில் மேற்கொண்டிருந்தது. | இந்த பிரசார விழா நடவடிக்கைகளின் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மக்களுக்கு உணர்த்துவதற்கான நோக்குடனும் இந்த செயற்திட்டத்தின் குடியிருப்பாளர்கள் உற்சாகப்படுத்தும் நோக்கம் அடையப்பெற்றமையால், அதிகாரசபையின் தோற்றம் உயர்வாக காட்டுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. | அதிகாரசபைக்கு அவசியமற்ற சுமையாக அரச நிதியை செலவிட்டு விழா நடாத்தல் ஆகாது. |
| (ஆ) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் சுதந்திரசதுக்கம் மற்றும் ஆர்கேட் சுற்றாடலில் மீளாய்வாண்டில் ஏப்ரல் 08 ஆந் திகதி நடைபெற்றன. அதற்காக அதிகாரசபை செலவிட்ட தொகை ரூபா 11.9 மில்லியன் ஆகும். அமைச்சு அல்லது வேறு வெளி நிறுவனம் ஏற்பாடு செய்த | அதிகாரசபை மொத்தமாகச் செலவழித்த ரூபா 11,992,500.00 பணிப்பாளர் சபையால் 2018.05.02 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, செலவினமானது ரூபா 11,992,500.00 வரை அதிகரித்தமைக்கான | அதிகாரசபையின் நோக்கத்திற்கு முரணான செலவினம் மேற்கொள்ளப்படலாகாது. |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டாட்டங்களுக்கு இவ்வாறு பெருமளவு செலவினத்தை அதிகாரசபை மேற்கொண்டதால் ஏற்படும் நலன் அல்லது அதற்கான அவசியம் கருத்திற் கொள்ளப்படவில்லை. | காரணம் எதிர்பார்த்தவாறு கலாசாரக் கண்காட்சிக்கு உதவ அனுசரணையாளர்கள் முன்வராமையாலேயே.<br><br>பொதுமக்களை ஊக்குவிக்கும் நோக்கில் இப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதற்காக அனுசரணை பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | வரிசை அமைச்சின் கீழ் செயற்படும் சுகித புரவர அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஆரம்ப விழாச் செலவினம் ரூபா 18,326,230 ஆகும். இதனை அமைச்சினது செலவின விடயத்திலிருந்து மேற்கொள்வதற்குப் பதிலாக அதிகாரசபையின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இவ்விழாவை ஏற்பாடு செய்யும் நிறுவனத்தை தெரிவு செய்வதற்குப் பொருத்தமான பொருட் கொள்வனவு வழிகாட்டி கடைப்பிடிக்கப்படவில்லை. | குறித்த செயற்திட்டத்திற்கு மதியுரைக் கட்டணமாக 6 சதவீத வருமானத்தை இந்த அதிகாரசபை பெறுவதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்ததால் அச் சமயம் பணியாற்றிய பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் இச் செலவினம் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டது. | அதிகாரசபையின் அதிகாரத்தைப் பெற்று செலவினம் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்த ரூபா 500,000 மற்றும் கொழும்பு காணி மற்றும் அபிவிருத்திக் கம்பனியில் முதலீடு செய்த ரூபா 36,309,841 என்பவற்றிற்கு மீளாய்வாண்டு இறுதி வரை பங்குலாபம் எதுவும் கிடைத்திருக்கவில்லை. | முதலீட்டுக்கு நிகரான பங்கிலாபத்தைக் கொடுப்பனவு செய்யாத நிறுவனங்களை அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அது தொடர்பாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. | அதிகாரசபையின் முதலீட்டுக்கு பங்குலாபம் பெற முடியாமையை முறையாகக் கவனிக்க வேண்டும். |
| (உ) | அதிகாரசபைக்குச் சொந்தமான பம்பலப்பிட்டிய புகையிரத நிலைய வீதியில் ஒரு ஏக்கர், 23.1 பர்ச்சஸ் விசாலமான காணியில் மாடி வீடும் கடையும் நிர்மாணிக்கப்படுவதற்காக 1993 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபை ரூபா 92 மில்லியனையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ரூபா 120 மில்லியனையும் செலவிட்டிருந்தன. இச் சொத்தை முகாமைத்துவமிடுவதற்கு வரையறுக்கப்பட்ட ஓசன்வியூ டெவலப்மன்ட் பிரத்தியேக கம்பனி எனும் | பங்குகளில் முதலீடு செய்வது தொடர்பாக பங்கிலாபத்தை அறிவிப்பது குறித்த கம்பனி ஆண்டிற்கான இலாபத்தைச் சம்பாதித்தல் மற்றும் ஏனைய காரணங்கள் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் என அறியத்தருகிறோம். எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டில் பங்கிலாபமாக ரூபா 1,213,003 அதிகாரசபைக்கு | அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளையும் கட்டிடங்களையும் ஒப்படைத்தல் மற்றும் முதலீடு செய்தல் என்பன தொடர்பாக குறித்த சட்டங்களுக்கும் விதிகளுக்கும் ஏற்ப அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படாதவாறு மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பெயரில் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் கூட்டுமுயற்சி ஒன்றை ஆரம்பித்திருந்தன. இக் கம்பனியானது கட்டிடங்களை வாடகைக்கு வழங்கி வருமானத்தைச் சம்பாதித்திருந்தபோதும், 1993 தொடக்கம் 2018 இறுதி வரை அதிகாரசபை பங்கிலாபம் எதனையும் பெற்றிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறாக பங்கிலாபம் வழங்காதிருக்கும் நிறுவனங்களை அதிகாரசபையின் முகாமைத்துவம் எதிர்காலத்தில் கவனித்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். கம்பனியின் நிர்வாகத்தில் உள்ள நலிவைக் கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கேள்வி கோரப்படாது ராஜகிரிய மாதின்னா கொடவில் உள்ள ஏறக்குறைய 10 ஏக்கர் காணி தனியார் கம்பனிக்கு வழங்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இரு சாராருக்குமிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி குறித்த கம்பனியால் அதிகாரசபைக்கு ரூபா 27 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பணிப்பாளர் சபை பின்னர் இரத்துச் செய்ததன் காரணமாக அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட இத்தொகையை மீண்டும் தனியார் கம்பனிக்கு வழங்க வேண்டி ஏற்பட்டது. உடன்படிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த தொகைக்கு 12 சதவீத வருடாந்த வட்டியை அதிகாரசபை கொடுப்பனவு செய்ய வேண்டியதால் ரூபா 14,348,027 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உடன்படான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி சட்டரீதியாக வட்டியைச் செலுத்த வேண்டிய ஏற்பட்டது என்பதை அறிகின்றோம். | கொடுப்பனவைத் துரிதப்படுத்தி, மேலதிக வட்டியை செலுத்தும் நிலைமையைக் கட்டுப்படுத்த நடவடிகை எடுக்க வேண்டும். |

## 3.2 இனங்காணப்பட்ட இழப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்குச் சொந்தமான கோட்டை டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையின் எல்லையில் அமைந்துள்ள 2 ஏக்கர் 2 றூட், 21.4 பர்ச்சஸ் காணியை அபிவிருத்தி செய்வதற்கு நெடுங்கால அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றிற்கு அதனை 99 ஆண்டுக் குத்தகைக்கு வழங்கும் போது அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினது முறையான அங்கீகாரமின்றி, அரசாங்க மதிப்பீட்டு விலையிலும் ரூபா 330 மில்லியன் குறைவாக குத்தகைக்கு வழங்கப்பட்டமையால் இக் காணியை வழங்கியதன் மூலம் அதிகாரசபைக்கு | அமைச்சின் செயலாளரது பணிப்புரைக்கமைய இத் தொகையை மீண்டும் குறித்த குத்தகையாளரிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | அதிகார சபையின் காணியை குத்தகைக்கு வழங்கும் போது குறித்த மதிப்பீட்டுப் பெறுமதியிலான வரி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பட்ட இழப்பு ரூபா 330 மில்லியனாகும். எனினும், இது தொடர்பாக மீளாய்வாண்டு முடிவு வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | | |
| (ஆ) | திரசரபுரவர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கென முகத்துவாரம் அலுத்மாவத்தையில் காணித்துண்டுகளுக்கு உரியவர்களுக்கு ரூபா 72,257,674 இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது. அதிகாரசபையின் வினைத்திறனின்மை காரணமாக இழப்பீடு தாமதமாகி ரூபா 4,034,154 வட்டியும் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டது. | வரையறுக்கப்பட்ட ரீல் கம்பனியின் தேவைக்காக இக்காணி சுவீகரிக்கப்பட்டது. அதன்போது, காணிச் சுவீகரிப்புக்கு ஆரம்ப கட்டத்தில் வரையப்பட்ட ரீல் கம்பனியால் திறைசேரியிடமிருந்து காணி சுவீகரிப்புக்கு நிதியேற்பாடு பெறப்பட்டு அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், பின்னர் வரையறுக்கப்பட்ட ரீல் கம்பனி செயலற்றுப் போனதால் திறைசேரியிடமிருந்து நிதியேற்பாடு கிடைக்கப்பெறவில்லை. அதன் காரணமாக, கம்பனியின் இழப்பீட்டையும் வட்டியையும் அதிகாரசபை செலுத்த வேண்டியேற்பட்டது. | இழப்பீட்டைக் குறித்த காலத்திற்குள் செலுத்தக்கூடிய முறைமையினை அறிமுகம் செய்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர்ப்புற புனர்ஜீவன செயற்திட்டத்தின் நிதி மதிப்பீடு மற்றும் அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்தல்களின்படி முயற்சி ஒன்றிற்கென வழங்கப்பட்டுள்ள காணியை முதலீட்டுச் செயற்திடடத்திற்கெனப் பயன்படுத்தி வருமானம் ஈட்டவேண்டுமாயினும், அதிகாரசபை விடுவித்திருந்த அநேக காணிகள் அவ்வாறு வருமானத்தை ஈட்டுவதற்கான நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படாது இருந்தன. வருமானத்தை சம்பாதிப்பதற்கான நோக்கத்துடன் மீளாய்வாண்டின் இறுதிவரை முயற்சிகளுக்கான திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதுமிருந்தது. | அதிகாரசபை சுவீகரித்திருந்த உயர் பெறுமதி மிக்க கம்பனிகளுக்குள் வெள்ளவத்தை மயூர பிளேஸ் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நெடுங்கால குத்தகையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அவ்வாறான நெடுஞ்கால குத்தகையின் மூலம் வழங்கப்பட முடியாதுபோன காணிகள் குறுகிய கால மற்றும் மத்திய கால குத்தகையின் அடிப்படையிலானவற்றிற்கு வழங்கப்பட்டிருந்ததால் குறிப்பிடத்தக்க வருமானத்தை இந்த அதிகாரசபை பெறுவதுடன் அதற்குப் புறம்பாக காணிகளை வழங்குவதற்கு அபிவிருத்தியாளர்களை கண்டுபிடிப்பதற்கு செயற்திடட மேம்பாட்டு பிர்வால் முன்மொழிதல்கள் | செயற்திட்ட ஆரம்பத்தில் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கோரப்பட்டபோதும் சாதகமான தன்மை இல்லாமையால் அக்காணிகளில் மாடி வீடுகள் (Re-Housing) நகர்புற புனர்ஜீவன செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்படவிருந்தன. | |
| (ஆ) | கொழும்பு கோட்டை டிரான்ஸ்வேர்க் சதுக்கக் காணி சந்தைப் பெறுமதியிலும் குறைவாக ரூபா 4,999,706,950 க்கு உள்ளூரில் ஸ்தாபிக்கப்பட்ட வெளிநாட்டு தனியார் கம்பனி ஒன்றிற்கு நெடுங்காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வித்தியாசத்திற்குள்ளான ரூபா 1,250,400,000 மீண்டும் அறவிடப்பட வேண்டுமென கருதப்பட்டபோதும் அத்தொகை அறவிடப்படவில்லை. | அதிகாரசபையின் காணிகளைக் குத்தகைக்கு வழங்கும் போது அறவிடப்படக்கூடிய வரியானது காலப்பகுதிக்கேற்பத் தீர்மானிக்கப்படும். கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டவாறு கோட்டை டிரான்ஸ்வேர்க் காணியின் 99 ஆண்டுகள் குத்தகைப் பணமாகத் தீர்மானிக்கப்பட்ட தொகை முதலீட்டுக் கம்பனியால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. காணியின் சந்தைப் பெறுமதிக்கும் வரித் தொகைக்குமிடையே உள்ள வித்தியாசமானது, அபிவிருத்திச் செயற்திட்டத்தில் நிர்மாணிக்கப்படும் வீடுகளை விற்பனை செய்யும் காணியைக் கணித்துப் பெறும் விகிதத்தில் 99 ஆண்டுக் குத்தகைப் பெறுமதி மற்றும் சந்தையில் நிலவும் பெறுமதி என்பவற்றுக்கிடையே ஏற்படும் விகிதத்தில் வீட்டு விற்பனையின் போது அறவிடப்படும். கலவையுடன் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது காணிகளை விற்பனை செய்வதற்கான நடைமுறை அதுவாகும். சுற்றறிக்கைக்குப் புறம்பாக மொத்த தொகையையும் அறவிடுவதற்கு அதிகாரசபையால் இயலாதுள்ளது. | வாடகைக் கொள்வனவுப் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதி என்பவற்றுக்கு இடையேயான வித்தியாசம் அரசாங்கத்திற்கு இழப்பாக அமையாதவாறு அதிகாரசபையின் கொள்கைக்கு அமைய அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அங்கீகரிக்கப்பட்டிராத 64 பதவிகளுக்கு அதிகாரசபையின் கீழ் உள்ள உப கம்பனி ஒன்றினூடாக ஊழியர்களை ஆட்சேர்த்து பின்னர் அந்த உத்தியோகத்தர்களைப் பணியிலமர்த்தி சம்பளமும் படியுமாக ரூபா 5,175,502 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அச்சமயம் நிலவிய சேவைக்கான அவசியத்தைக் கருத்திற்கொண்டு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் அதிகாரசபையின் வெப் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டு அவர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதற்கென விண்ணப்பித்தோரில் பொரும்பாலானோர் அதிகாரசபையின் உப கம்பனியில் | அதிகாரசபைக்குத் தேவையான பதவியணியை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகிறார்கள். 2020.01.03 ஆந் திகதியன்று முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்கியது. | |
| (ஈ) | முறையான விதிமுறைககளைக் கடைப்பிடிக்காது அதிகாரசபை மதியுரையாளர்கள் ஆட்சேர்த்திருந்தது. ஆட்சேர்க்கப்பட்ட மதியுரையாளர்களை மதியுரைச் சேவையை வழங்குவதற்குரிய போதிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பெற்றிருக்கவில்லை. | நகர அபிவிருததி அதிகாரசபையின் தற்போதைய பதவியணியில் தொழிற்படு பணிப்பாளருக்கான பதவி ஒன்றில்லை. எனினும், வரிசை அமைச்சரால் இப்பதவிக்கான நியமனம் செய்யப்பட்டுள்ளது. தொழிற்படு பணிப்பாளர் பதவி அதிகாரசபையின் நிரந்தர பதவி அல்ல. ஆகவே, அதற்குரிய நிரந்தர தகைமைகள் / பொறுப்புகள் என்பன கிடையாது. PED 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைப்படி படி வழங்கப்படவுள்ளது. | அதிகாரசபைக்குத் தேவையான பதவியணியானது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | அதிகாரசபைக்குச் சொந்தமான புறக்கோட்டை சார்மஸ் தானியக் களஞ்சியக் காணியை குத்தகைக்கு வழங்கும் போது / கூறுவிலைகளைக் கோரும் போது சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைகளுக்கு முரணாக சட்டபூர்வமற்றவாறு குத்தகையாளரால் மேற்கொள்ளப்படும் இடைக்காலக் குத்தகை மற்றும் நிரந்தர கடைகளுக்கு சுழற்சி முறையில் அதிகாரசபையால் அங்கீகாரம் வழங்கப்படுவதால் கம்பனியை நெடுங்காலக் குத்தகைக்கு வழங்குவதில் சட்டரீதியான சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. அவ்வாறே, குத்தகை வழங்கப்பட்டதன் பின்னர் நிபந்தனைகள் மாற்றம் செய்யப்படுவதால் இக்காணியை கூடிய கூறுவிலைக்கு வழங்கும் வாய்ப்பை அதிகாரசபை இழந்திருந்தது. | காணியில் இதுவரை வேறெவ்வித வியாபரமும் நடைபெறுவதில்லை. வாகனத்தரிப்பிடம் ஒன்று இயங்குகின்றது. அதற்கமைய, குறித்த காணியை நெடுங்காலக் குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக சட்டபூர்வக் கடப்பாடுகளும் ஏற்படவில்லை. | காணியைக் குத்தகைக்கு வழங்கும் போது வெளிப்படையான தன்மை நிலவ வேண்டும். வரி நிபரந்தனைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை ஆராய வேண்டும். |
| (ஊ) | தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயக அலுவலகங்களின் சகல உத்தியோகத்தர்களுக்கும் வேறு பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்குமாக 108 பேருக்கு கடந்த பல ஆண்டுகளாக திறைசேரியின் முன் அங்கீகாரமின்றி அவர்களது சம்பளத்தில் 1/3 விசேட | தலைவரதும் பணிப்பாளர் நாயகத்தினதும் பதவியணியினருக்கு சம்பளத்தில் 1/3 பங்கை இரகசிய படியாக வழங்குமாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. 2013.04.17 இல் (பணிப்பாளர் சபை பத்திரம் | இரகசியப்படிக் கொடுப்பனவு முறையான அங்கீகாரத்துடன் மாத்திரமே வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| படியாக வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அவ்வாறு வழங்கப்பட்ட மொத்த தொகை ரூபா 12,451,408 ஆகும். அவ்வாறே, விசேட படியை வழங்குவதற்காக உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டமை மற்றும் கொடுப்பனவின் அடிப்படை என்பன கணக்காய்வில் விளக்கமளிக்கப்படாதிருந்தது. | இல. 107/2013) அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. இதற்கு திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |

**3.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் துணைக்கம்பனியான நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக் கம்பனியால் ரூபா 17,500,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட டொயோட்டா லேனட்குறூசர் வகையைச் சேர்ந்த ஜீப் வண்டியானது கொள்வனவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் அதிகாரசபையின் தலைவரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அவ் வாகனத்தின் சகல பராமரிப்புச் செலவினமும் துணைக்கம்பனியால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் அதிகாரசபையால் மீளளிக்கப்பட்டிருந்தது. | 2014 ஆம் ஆண்டில் அதிகாரசபையில் துணைக் கம்பனியான நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக் கம்பனியால் ரூபா 17,500,000 பெறுமதியான மேற்படி ஜீப் வண்டி கொள்வனவு செய்யப்பட்ட போதும் அது அதிகாரசபையின் தலைவராலேயே பயன்படுத்தப்படுகின்றது. அச்சமயம் அதிசாரசபையின் தலைவரே அக் கம்பனியினதும் தலைவராக இருந்ததால் துணைக் கம்பனி வாகனத்திற்குச் செலுத்திய சகல பராமரிப்புச் செலவினத்தையும் அதிகாரசபை மீளளிப்புச் செய்திருந்தது. | அதிகாரசபை சொத்தைக் கொள்வனவு செய்யும் போது சட்ட விதிகளுக்கு அமைய கொள்வனவை மேற்கொள்வதுடன் சுழற்சி முறையில் வாகனத்தை பயன்படுத்துமாறு குறித்த உத்தியோகத்தர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும். |

**3.6 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 812.63 ஏக்கர் (320 ஹெக்டயர்) மில்லேவ தோட்டம் ஹொரணை கைத்தொழிலகத்தை ஸ்தாபிக்கும் நோக்குடன் சுவீகரிக்கப்படுவதற்கு அமைச்சரவை அதிகாசசபைக்கு 2016 டிசெம்பர் 21 ஆந் திகதி அதிகாரம் வழங்கியிருந்தது. அதற்கமைய, சாத்தியக்கூறு ஆய்வு எதுவுமில்லாதும் இறப்பர் உற்பத்தி மூலம் பெறப்படும் பங்களிப்பைக் கருதாமலும் 2017, 2018 ஆம் ஆண்டுகளில் குறித்த காணி | உத்தியோகத்தர்களின் மேலதிக வேலைகளுக்கு சம்பளத்தில் 1/3 பங்கை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கைக்கமைய வழங்கப்படவுள்ளது. இதற்கான பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. 1/3 க்கான அங்கீகாரம் பெறப்படும் வரை அதில் ½ பங்கு மாத்திரம் வழங்கப்பட்டது. இக் கொடுப்பனவும் 2020 பெப்ரவரி | காணியைச் செயற்திட்டங்களுக்கு சுவீகரிக்கும் போது அதனைக் குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தி தேசிய பொருளாதார மற்றும் சமுதாய தாக்கம் குறையும் விதத்தில் நடக்க வேண்டும்.<br><br>சுற்றறிக்கையை உத்தியோகத்தர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பேற்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் திகதியிலும் தைத்தொழில்பேட்டை திட்டமிடப்பட்டோ அடிப்படை வசதிகள் திட்டமிடப்பட்டோ அல்லது வேறு அபிவிருத்தி நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை. அவ்வாறே, இந்த அபிவிருத்தி நடவடிக்கையால் வீடுகளையும் தொழிலையும் இழக்கும் தோட்டத்தொழிலாளர்களது வாழ்வாதார நடவடிக்கைகளும் அதிகாரசபையால் கவனத்திற் கொள்ளப்படவில்லை. தற்சமயம் இறப்பர் பால் வெட்டுதல் மந்தகதியில் நடைபெறுவதுடன் வருமானமானது சுவீகரிப்புக்கு முன்பிருந்த நிலையை விடக்குறைவாகவும் இருந்தது. | முதல் இடைநிறுத்தப்படும். | தவறாகப் புரிந்து கொள்ளாது திறைசேரியின் ஆலோசனைப்படி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையால் நடாத்தப்படும் வாடகை மற்றும் வாடகைக் கொள்வனவு அடிப்படையிலான விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கொழும்பு மத்திய சுப்பர் வர்த்தகக் கூட்டுத்தொகுதி, கொழும்பு கோல்ட் சென்டர், மிதக்கும் வர்த்தகக் கூட்டுத்தொகுதி ஆகிய செயற்திட்டங்களால் திட்ட நலிவு காரணமாகவும் அங்கு போதிய வாடிக்கையாளர்கள் வராதிருப்பதும் காரணமாக அவை வெற்றி அளிப்பனவாக அமையவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளிவில் அநேக கடைகள் மூடப்பட்டிருந்தன. இச் செயற்திட்டத்தை மீண்டும் சக்திமிக்கதாக்கி அக் கூட்டுத்தொகுதிக்கு விரிவான பிரசாரத்தை மேற்கொள்வதற்குப் போதுமான நடவடிக்கைகளை அதிகாரசபை எடுத்திருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பயனற்ற இச் சொத்துக்களை வினைத்திறனுடனும் பயன்மிக்கதாகவும் உபயோகிப்பதற்கு முறையான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

## 3.7 கொருட்கொள்வனவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஏப்ரலில் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட அதிகாரசபையின் நோக்கங்களுக்கு புறம்பான விடயமாகிய சூரியாபிஷேக விழாவுக்கு பொருட்கொள்வனவு நடைமுறைகள் எதனையும் கடைப்பிடிக்காது தனியார் நிறுவனம் இரண்டிற்கு ரூபா 11.9 மில்லியன் செலவினமாக வழங்கப்பட்டிருந்தது. | இதனை மேற்கொள்ளவிருந்த மிகக்குறுகிய காலத்தினுள் சாதாரண பொருட் கொள்வனவு நடைமுறைகளைக் கடைப்பிடிக்க முடியாதிருந்தமையால் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் முன்னர் வழங்கலை மேற்கொண்ட | பொருட் கொள்வனவு விதிமுறைகளுக்கு ஏற்ப பொருட் கொள்வனவுக்கான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவனங்களிலிருந்து பெக்ஸ் மூலமும் அதிகாரசபையின் வெப் இணையத்தளத்தின் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (ஆ) | பொருட் கொள்வனவு திட்டத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் திறைசேரி நிதியேற்பாடு என்பவற்றுடன் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த பொருட் கொள்வனவுகளது எண்ணிக்கை 144 ஆகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் அதில் 116 செயற்திட்டங்கள் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்திருந்தன. எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டு இறுதியளவில் அவற்றில் 39 மாத்திரமே பொருட் கொள்வனவுகளைப் பூர்த்தி செய்திருந்தன. நிறைவேற்றப்பட உள்ள பொருட்கொள்வனவு நடவடிக்கைகளில் அது 33.62 சதவீதமாகும். | திறைசேரி நிதி வழங்கும் செயற்திட்டங்களுக்கு வேறாகவும் அதிகாரசபை நிதியளிக்கும் செயற்திட்டங்களுக்கு வேறாகவும் பொருட் கொள்வனவுத் திட்டங்கள் தேவைப்படுவதால் அவை அவ்வாறே தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான பொருட் கொள்வனவுக்குரிய தகவல்கள் குறித்த திகதிக்கு முன்னர் பெறப்படாததால் 2018, 2017 இல் அவை குறித்த தினத்தில் அவை பூர்த்தியாகவில்லை. | பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்து செயற்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (இ) | கொலொன்னாவ வீடமைப்புத்திட்டத்திற்கான வேலைகளை வெளிநாட்டுக் கம்பனி ஒன்று இடை நடுவே நிறுத்தியிருந்தது. இதனையடுத்து, இரு இலங்கை கம்பனிகளிடம் இவ் வேலை ஒப்படைக்கப்பட்டது. அக்கம்பனிகள் தெரிவுசெய்யப்பட்ட விதம், அங்கீகாரம் பெறப்பட்ட விதம் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வைப் பெற்றதன் பின்னர், தெரிவுசெய்யப்பட்டதா என்பதும் விளங்கவில்லை. | அளுத்மாவத்தை வேலைத்தளத்தில் ஐஏசுஊடு நிறுவனம் நிர்மாண வேலையைத் தொடங்காமையால் நிர்மாண வேலையை மீண்டும் ஒப்படைக்கையில் உள்ளூர் ஒப்பந்தகாரர் தமக்கே உரிய விதத்தில் நிர்மாண வேலையை மேற்கொள்ள தடை இல்லாதிருந்தது. ஆகவே IVRCL தொழில்நுட்ப உத்திகள் சம்பந்தமாக சாத்தியக்கூறு அறிக்கை தேவைப்படவில்லை. | பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்கு அமைய செயற்திட்டம் அமுலாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்தகாரர்களது தாமதம் காரணமாக கொலொன்னாவ கலாசார நகர செயற்திட்டத்திற்கு சொந்தமான காணியிடமிருந்து வெளியேறிய குடியிருப்பாளர்க்கு தற்காலிக வீட்டு வாடகையாக ரூபா 35 மில்லியன் செலவிட வேண்டியேற்பட்டது. | கருத்து வழங்கப்படவில்லை. | காலதாமதமின்றி செயற்பட்டு செலவைக்குறைக்க வேண்டும். |

## 3.8 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி வீதிபுனரமைப்பு மற்றும் கலவை அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பாக அபிவிருத்தியாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடும் போது உடன்பாடு குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மிகவும் இலாபகரமாக அமையும் விதத்தில் நிபந்தனைகளை உள்ளடக்காது மாடிவீட்டு நிர்மாணக்கிரயத்தை மாத்திரம் அபிவிருத்தியாளர்களது செலவாக அமையும் விதத்தில் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டதால் மாடிவீடுகளது நீர், மின்சாரம், கழிவுக்குழாய்கள் என்பவற்றினது இணைப்பு மற்றும் உள்ளக வீதிகளும் கழிவுநீர் செல்லும் பாதைக்கான செலவினம் என்பவற்றை அதிகாரசபை செலுத்தவேண்டியேற்பட்டது. இதற்காக அதிகாரசபை மேலதிகமாக செலவழித்த தொகை ரூபா 435,877,228 ஆகும். | நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் செயற்திட்ட அபிவிருத்தியாளர்களது கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்டவாறு செயற்திட்டக் காணியில் நீர், மின்சாரம் அடங்கலான பொதுப் பாவனை வசதிகளை அதிகாரசபை வழங்க வேண்டும்.<br><br>செயற்திட்ட அபிவிருத்தியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பிடப்பட்ட கால எல்லை நீடிப்பு பெரும்பாலானவற்றிற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டக் காணியை தீர்வு செய்து வழங்குவதற்கு ஏற்பட்ட தாமதமே காரணமாகும் எனத் தோற்றுவதுடன், பொதுப் பயன்பாட்டு வசதிச் செயற்திட்டக் காணியிலிருந்து வேறு ஒரு இடத்திற்கு மாற்றம் செய்ய வேண்டியமையால் ஏற்பட்ட காலதாமதமாகவும் தோற்றுகின்றது. மேலும், ஆரம்ப காலப்பகுதியை நீடித்தமை சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டதாகும். | அதிகாரசபைக்கு ஏற்படும் இழப்பை குறைப்பதற்கு பொதுத்திறைசேரி மற்றும் ஒப்பந்தகாரர்களுடன் கலந்துரையாடி தேவையான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாது வாவியை எதிர்நோக்கியவாறு 3118 சதுர மீட்டரில் ஏறக்குறைய 32 அறைகளை உள்ளடக்கிய விசாலமான யாழ்ப்பாண வாடிவீட்டை நிர்மாணிப்பதற்கான தேபியன் தடுப்புச்சுவர் மற்றும் கட்டிடத்தின் அடித்தளத்தை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 77,488,989 | 2015 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதமளவில் புதிய அரசாங்கம் ஆட்சிக்குவந்ததன் பின்னர் நியமிக்கப்பட்ட புதிய முகாமைத்துவம் செயற்திட்டத்திற்கு பணம் வழங்குவதை நிறுத்தி இருந்தது. 2020 வரை அவ்வேலை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.<br><br>தற்போதைய உயர் முகாமைத்துவம் இதில் விசேட கவனம் செலுத்தி கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் | செயற்திட்டத்தை ஆரம்பிக்கையில் சாத்தியக்கூறு ஆய்வின் மூலம் பயனைச் சரிவர இனங்கண்டு அதனை ஆரம்பிக்க வேண்டும். |

| | |
|---|---|
| செலவிடப்பட்டு, பின்னர் வேலை இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக வேறு பயனுள்ளவற்றிற்கு அத்தொகையை செலவிடக்கூடிய வாய்ப்பு இழப்புக்குள்ளாகியிருந்தது. மேலும் வாடிவீட்டின் கொங்கிரீட் தூண்களை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்திய இரும்புக்கம்பி துருப்பிடித்தவாறிருந்ததால் அச் செலவினம் பயனற்றதாக அவதானிக்கப்பட்டது. | அ ங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. தனியார் துறையினரின் நிதிப்பங்களிப்புடன் அரசாங்கத்தின் பிரத்தியேக முதலீடாக (PPP Model) எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அத்துமீறிய குடியேற்றம், அதிகார வரம்பிற்கு மேலாகச் செயற்படுதல், முறையான விதிமுறைகளுக்கு புறம்பாக சொத்துக்களைக் குத்தகைக்கு வழங்குதல், குத்தகையை அறவிடுதல், காணிப் பயன்பாட்டில் நலிவுகள், பயனற்ற சொத்துக்கள், சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள், ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பாக முன்னைய ஆண்டுகளிலும் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட 24 முக்கிய அவதானிப்புகள் தொடர்பாக அதிகாரசபை மீளாய்வாண்டு இறுதியிலேனும் போதிய கவனம் செலுத்தி இருக்கவில்லை. சில அவதானிப்புகள் அரசாங்க முயற்சிகள் சம்பந்தமான குழுவிற்கும் அறிவிக்கப்பட்டிருந்தன. | எதிர்கால நடவடிக்கைகள் மூலம் சகல விடயங்களிலும் நாளதுவரையாக்கப்படும். | தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |